**கன்னியாகுமரி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : முனைவர். (திருமதி) கா. சரோஜா, எம்.எஸ்ஸி., எம்.பில்., பி.எச்.டி**

ந.க.எண்: 99/ஆ/2023 நாள் : 13 .12.2023

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – கன்னியாகுமரி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – கருணை அடிப்படை பணிநியமனம் - இளநிலை உதவியாளர் செல்வி. க. பிரித்திஸ்கா – 02.06.2022 மு.ப. அரசுப் பணியில் சேர்ந்தமை – பணிவரன்முறை நியமன அலுவலர் அளவிலேயே முறைப்படுத்த ஆணை பெறப்பட்டமை – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 34585/பி2/2019 நாள். 25.01.2022
2. திருநெல்வேலி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண். 752/அ1/2022 நாள். 02.02.2022
3. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 800/பி/2022 நாள். 22.11.2022
4. அரசு கடித எண். 1535/ஜி2/2023-1 நாள். 30.10.2023
5. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கடித ந.க.எண். 1058/பி1/2023 நாள். 06.12.2023

*****

பார்வை (1)-ல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் அடிப்படையில், பார்வை (2)-ல் காணும், திருநெல்வேலி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் வாயிலாக, கருணை அடிப்படை தற்காலிக பணிநியமன ஆணை பெற்று, 02.06.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் செல்வி. க. பிரித்திஸ்கா என்பாருக்கு, பணிவரன்முறைப் படுத்துதல் தொடர்பாக, பார்வை (5)-ல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கடிதத்தில், **“தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி-10-ன்படி, இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பதவிக்கு நியமன அலுவர் சார்ந்த இணை இயக்குநர்/கல்லூரி முதல்வரே ஆவார். இந்நிலையில் இப்பணியாளர்கள் சார்பாக அரசின் விதித்தளர்வு ஏதும் தேவைப்படாததால், இவர்களின் பணியினை தங்கள் அளவிலேயே வரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு சார்ந்த மண்டல இணை இயக்குநர்கள்/கல்லூரி முதல்வர்களுக்கு தெரிவிக்கலாகிறது”** என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை (5)-ல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட மேற்காணும் ஆணையின் அடிப்படையிலும், தனியர், பணியில் சேர்ந்து ஓராண்டு நிறைவு பெற்ற நிலையிலும், கருணை அடிப்படைபணிநியமனம் பெற்று இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், செல்வி. க. பிரித்திஸ்கா என்பாருக்கு, கலம்(4)-ல் குறிப்பிட்ட நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். (1) | பெயர் / பதவி (2) | பணியில் சேர்ந்த நாள் (3) | பணிவரன்முறை நாள் (4) |
|---|---|---|---|
| 1 | செல்வி. க. பிரித்திஸ்கா, இளநிலை உதவியாளர் | 02.06.2022 முற்பகல் | **02.06.2022 முற்பகல்** |

கா. சரோஜா 13/12/23

**முதல்வர்**
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கன்னியாகுமரி - 629 401

பெறுநர்
செல்வி. க. பிரித்திஸ்கா, இளநிலை உதவியாளர்

நகல் : 1. கல்லூரிக் கல்வி இயக்குநர். சென்னை-15 (பணிந்தனுப்பப்படுகிறது)
2. கோப்புக்கு